சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **230 / 2021**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.1**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி 14.10.2025 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ஆனந்தஜோதி | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட புகைப்பட நகல் - ம.சா.ஆ.1

2) TN 48 BB 7030 என்ற பல்சர் இரண்டு சக்கர வாகனத்தின் மோட்டார் ஆய்வாளர் அறிக்கையின் சான்றிட்ட புகைப்பட நகல் - ம.சா.ஆ.2

3) TN 47 AW 9965 என்ற பதிவு கொண்ட காரின் மோட்டார் ஆய்வாளர் அறிக்கையின் சான்றிட்ட புகைப்பட நகல் - ம.சா.ஆ.3

4) குற்ற அறிக்கையின் சான்றிட்ட புகைப்பட நகல் - ம.சா.ஆ.4

5) தோராய வரைபடத்தின் சான்றிட்ட புகைப்பட நகல் - ம.சா.ஆ.5

6) பிரேத பரிசோதனை அறிக்கையின் சான்றிட்ட புகைப்பட நகல் - ம.சா-ஆ.6

7) விபத்து குறிப்பின் சான்றிட்ட புகைப்பட நகல் - ம.சா.ஆ.7

8) சின்னதுரையின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.8

9) முதல் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் புகைப்பட நகல் - ம.சா.ஆ.9

10) நான்காவது மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் புகைப்பட நகல் - ம.சா.ஆ.10

11) ஐந்தாவது மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் புகைப்பட நகல் - ம.சா.ஆ.11

12) முதல் மனுதாரரின் ஆதார் அட்டையின் புகைப்பட நகல் - ம.சா.ஆ.12 ( ம.சா.ஆ.9 முதல் ம.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டவை)

13) இரண்டாவது மனுதாரரின் ஆதார் அட்டையின் புகைப்பட நகல் - ம.சா.ஆ.13

14) மூன்றாவது மனுதாரரின் ஆதார் அட்டையின் புகைப்பட நகல் - ம.சா.ஆ.14

15) நான்காவது மனுதாரரின் ஆதார் அட்டையின் புகைப்பட நகல் - ம.சா.ஆ.15

16) ஐந்தாவது மனுதாரரின் ஆதார் அட்டையின் புகைப்பட நகல் - ம.சா.ஆ.16

17) சின்னதுரை என்பவரின் ஓட்டுநர் உரிமம் அடையாள அட்டை நகல் - ம.சா.ஆ.17.

ம.சா.ஆ.17 ஆவணங்கள் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டவை

18) சின்னதுரையின் Trichy division photo and video graphar association புகைப்பட நகல் (பதிவு எண்.32 / 07) - ம.சா.ஆ.18 மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

மூன்றாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்து சமயத்தில் எனது கணவர் ஓட்டி சென்ற வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் மனுவானது குறைபாடு உடையது என்றால் சரியல்ல. அந்த வகையில் மேற்படி மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனது கணவர் தான் வாகனத்தை ஓட்டத்தெரியாமல் ஓட்டி மேற்படி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு முழுகாரணம் எனது கணவர் தான் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரின் இறப்பிற்கு ஏதேனும் இழப்பீடு பெற வேண்டும் என்றால் முதல் எதிர்மனுதாரர் தான் வழங்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மூன்றாவது எதிர்மனுதாரரை பொறுத்து மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரின் வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் விபத்து சமயத்தில் கரூர் - திருச்சி செல்லும் சாலையில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றார். எனது கணவர் தான் வாகனத்தை ஓட்டத்தெரியாமல் ஓட்டி சாலையில் திடீரென்று குறுக்கே வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் போட்டோ கிராப்பர் வேலை செய்து வருகிறார் என்றும் மாதம் ரூ. 50,000/- சம்பாதித்து வருகிறார் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வேலை செய்துவருவதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கோரியுள்ள இழப்பீடானது எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மூன்றாவது எதிர்மனுதாரருக்கு எதிராக மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம் /- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.